DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 93/2020

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மணிகண்டன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ஜெயராமன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/09/2024

(எதிரி ஆஜர்)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் விருப்பாட்சியில் குடியிருந்து வருகிறேன். நான் தேங்காய் உடைக்கும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது தம்பி கௌதம் வண்டியை ஆக்ஸிடெண்ட் பண்ணது அவர் தான். 02.12.2019 ம்தேதி எனது தம்பி கௌதம் என்ரோ இருசக்கரவாகனத்தில் திண்டுக்கல் பழனி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் நானும்,சூர்ய பிரகாஷ் என்பவரும் மற்றொரு இருசக்கரவாகனத்தில் வந்து கொண்டிருந்தோம். எதிரே வந்த தோஸ்த் வாகனமானது புல் ஸ்பீடில் கவன குறைவாக ஆரன் அடிக்காமல் வந்து இடது புறமாக வந்த எனது தம்பியின் இருசக்கரவாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் எனது தம்பி தூக்கி எறியப்பட்டு வெள்ளக்கோட்டிற்கு சமத்துவபுரம் பிரிவிற்கு மேற்கே கிடந்தான். நாங்கள் தூக்கி பார்த்த போது தலையில் ரத்தக்காயமும் வலது காலிலும் ரத்தக்காயமும் ஏற்பட்டு இருந்தது. தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஒட்டன்சத்திரம் குமரன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை முடித்து கோவை ராயல் கேர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். அன்று நள்ளிரவு ஒரு மணி அளவில் 03.12.2019 ம் மருத்துவர் பரிசோதனை செய்து விட்டு வரும் வழியிலேயே உயிர் பிரிந்து விட்டதாக சொன்னார்கள். பிறகு ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

புகாரை நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான்.நான் சொல்லும் போது வேறு ஒருத்தர் எழுதினார். அந்த வேறு ஒருவர் யார் என்று என்னால் சொல்ல முடியும். எனது நண்பர் ராமன் என்பவர் எழுதினார். ராமன என்பவரின் அப்பா பெயர் முருகன் ஆகும். அவர் சமத்துவபுரத்தை சார்ந்தவர். நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும் என்று சொன்னால் எனது தம்பி இறந்துவிட்டதால் அந்த நேரத்தில் என்னால் எழுத முடியவில்லை. அ.சா.ஆ.1 புகாரை சத்திரப்பட்டி காவல்நிலையத்தில் தான் கொடுத்தேன். மேற்படி புகாரை மருத்துவமனையில் வைத்து நான் போலீசாரிடம் கொடுத்ததாக சொன்னால் அது பொய் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரிலும் போலீசார் என்னை விசாரித்த போதும் முதல்விசாரணையில் சொன்னது போல் விபத்து ஏற்படுத்திய வாகனம் வலதுபுறமா கஏறி வந்து இடதுபுறமாக சென்று கொண்டிருந்த எனது தம்பியின் இருசக்கரவாகனத்தின் மீது மோதியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது புகாரிலும் என்னை போலீசார் விசாரித்த போதும் விபத்து நடந்த போது எனது தம்பி தூக்கி வீசப்பட்டு சமத்துவபுரம் பிரிவிற்கும் மேற்கு பக்கமாக விழுந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி சொல்லியுள்ள இரண்டு விவரங்களும் அ.சா.ஆ.1 புகாரில் இல்லை என்று சொன்னால் அந்த புகார் நான் கொடுத்த புகார் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்து சம்பந்தமாக ஒரு புகார் தான் கொடுத்தேன். இரண்டு புகார் கொடுக்கவில்லை. நானும் சூர்ய பிரகாஷ்–ம் எனது தம்பியும் மூவரும் ஒரே நேரத்தில் தான் சென்றோம். எனது தம்பி சென்ற வண்டிக்கும் நாங்கள் சென்ற வண்டிக்கும் எவ்வளவு அடி தூரம் இருக்கும் என்றால் 10 அடி தூரம் இருக்கும். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதை போல விபத்து ஏற்படுத்திய வாகனம் வலதுபுறமாக ஏறிவந்து விபத்தை ஏற்படுததி இருந்தால் அதில் நானும் சூர்ய பிரகாஷ்ம் சென்ற இருசக்கரவாகனமும் விபத்தில் பாதிக்கப்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல.நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதை போல விபத்து சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதரர் கண்மூடி தனமாகவும்அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று சரக்குவாகனத்தின் மீது மோதி வழக்கு விபத்துஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இழப்பீட்டு வழக்கில் லாபம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் நான் இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. வழக்கு விபத்திற்கு எதிரி எந்த விதத்திலும் பொறுப்பானவர் அல்ல என்றால் சரியல்ல. எதிரி மிகவும் கவனமாகவும் சாலை விதிமுறைகளை கடைபிடித்தும் அவரது வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.09.12 17:21:39 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/09/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 93/2020

List of Witness : Lw2

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சூர்யா | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | மூர்த்தி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/09/2024

(எதிரி ஆஜர்)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் விருப்பாட்சியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன்.ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆக்ஸிடெண்ட் அன்று பார்த்தேன். 02.12.2019 ம் தேதி இரவு 8.30 மணிக்கு நானும், அ.சா.1 மணிக்கண்டனும் ஒரு இருசக்கரவாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்னால் கௌதம் அவரது இருசக்கரவாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தார். விருப்பாட்சியில் இருந்து சென்றுக்கொண்டிருந்தோம். முன்னால் கூட்டமாக இருந்தது. நாங்கள் சென்று பார்த்தோம். விபத்தில் தலை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டு கௌதம் கீழே படுத்து இருந்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

கடந்த 02.12.2019 ம் தேதி இரவு 8.30 மணிக்கு எனது இருசக்கரவாகனத்தில் திண்டுக்கல் பழனி மெயின் ரோடு சமத்துவபுரம் பிரிவு அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம் என்றும், எனக்கு முன்னால் எனது நண்பர் கௌதம் என்பவர் அவருக்கு சொந்தமான TN 94 Z 7896 என்ற பதிவெண் கொண்ட

Ntoro என்ற இருசக்கரவாகனத்தில் திண்டுக்கல் பழனி ரோட்டில் சமத்துவபுரம் பிரிவு அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார் என்றும், அதே ரோட்டில் மேற்கிலிருநது கிழக்கு நோக்கி வந்த TN 69 BB 1794 என்ற பதிவெண் கொண்ட தோஸ்த் வாகனத்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும் , அஜாக்கிரதையாகவும் ஆரன் அடிக்காமலும் ஓட்டிவந்து கௌதம் ஓட்டிவந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் கௌதம் தூக்கி எறியப்பட்டு கீழேவிழுந்துவிட்டார் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்த நானும், மணிக்கண்டனும் இருசக்கரவாகனத்தை நிறுத்திவிட்டுகௌதமை தூக்கி பார்த்த போது அவருககு தலை, வலது காலில் இரத்தக்காயம் ஏற்பட்டு இருந்தது என்றும், தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஒட்டன்சத்திரம் குமரன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், பின்பு கோயம்புத்தூர் ராயல் கேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்த போது மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு கௌதம் இறந்துவிட்டார் என்று கூறினார் என்றும், சம்பவம் தொடர்பாக அ.சா.1 சத்திரப்பட்டி காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நானும், கௌதமின் அண்ணன் அ.சா1 மணிக்கண்டனும் தான் ஒன்றாக ஒரே இருசக்கரவாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான்.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P K DHAMAYANTHI Digitally signed by P K DHAMAYANTHI Date: 2024.09.12 17:21:49 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/09/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 93/2020

List of Witness : Lw4

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செந்தாமரை | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ஜெயராமன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/09/2024

(எதிரி ஆஜர்)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் விருப்பாட்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்கள் இருக்கும் தேதி சரியாக ஞாபகம் இல்லை. எனது இளைய மகன் கௌதமிற்கு விபத்து ஏற்பட்டதாக எனது மூத்த மகன் மணிகண்டன் என்னை ஒட்டன்சத்திரம் குமரன் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

கடந்த 02.12.2019ம் தேதி இரவு 8.30மணிக்கு அ.சா.1ம் அ.சா.2ம் இருசக்கரவாகனத்தில் திண்டுக்கல் பழனி மெயின் ரோடு சமத்துவபுரம் பிரிவு அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களுக்கு முன்னால் கௌதம் அவருக்கு சொந்தமான TN 94 Z 7896 என்ற பதிவெண் கொண்ட Ntoro என்ற இருசக்கரவாகனத்தில் திண்டுக்கல் பழனி ரோட்டில் சமத்துவபுரம் பிரிவு

அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார் என்றும், அதே ரோட்டில் மேற்கிலிருநது கிழக்கு நோக்கி வந்த TN 69 BB 1794 என்ற பதிவெண் கொண்ட தோஸ்த் வாகனத்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும் , அஜாக்கிரதையாகவும் ஆரன் அடிக்காமலும் ஓட்டிவந்து கௌதம் ஓட்டிவந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் கௌதம் தூக்கி எறியப்பட்டு கீழேவிழுந்துவிட்டார் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்த அ.சா.1 மணிகண்டன் இருசக்கரவாகனத்தை நிறுத்திவிட்டு கௌதமை தூக்கி பார்த்த போது அவருக்கு தலை, வலது காலில் இரத்தக்காயம் ஏற்பட்டு இருந்தது என்றும், தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஒட்டன்சத்திரம் குமரன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார் என்றும், எனது மகன் அ.சா1 மணிகண்டன் என்னிடம் கூறினார் என்றும், நான் குமரன் மருத்துவமனையில் சென்று பார்த்தேன் என்றும், பின்பு கௌதமை கோயம்புத்துார் ராயல் கேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்த போது மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு கௌதம் இறந்துவிட்டார் என்று கூறினார் என்றும், சம்பவம் தொடர்பாக அ.சா.1 சத்திரப்பட்டி காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.09.12 17:21:56 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/09/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 93/2020

List of Witness : Lw5

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராமகிருஷ்ணன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | முத்துகருப்பன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/09/2024

(எதிரி ஆஜர்)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் விருப்பாட்சியில் குடியிருந்து வருகிறேன். நான் ஐஸ் வியாபாரம் செய்து வருகிறேன்.சுமார் 5 வருடங்கள் இருக்கும் தேதி சரியாக ஞாபகம் இல்லை நான் கௌதமிற்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு குமரன் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கௌதம் இருசக்கரவாகனத்தில் சென்று கொண்டிருந்த போது சமத்துவபுரம் அருகே மேற்கே இருந்து கிழக்கு நோக்கி வந்த தோஸ்த் வாகனமானது மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

**இல்லை.**

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.09.12 17:22:02 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/09/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 93/2020

List of Witness : Lw6

Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சரவணன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பிச்சைமுத்து | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/09/2024

(எதிரி ஆஜர்)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் விருப்பாட்சியில் குடியிருந்து வருகிறேன். நான் பழக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். நான் 02.12.2019ம் தேதி இரவு 8.00 , 8.30மணி இருக்கும் நான் வீட்டில் இருந்தேன். கௌதமிற்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்து நான் சமத்துவபுரம் சென்று பார்த்தேன். கௌதம் இருசக்கரவாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்த போது சரக்கு வாகனமானது மேற்கே இருந்து கிழக்கு நோக்கி வந்து விபத்து ஏற்பட்டதாக ஊரில் உள்ளவர்கள் சொன்னார்கள். நானும் சென்று பார்த்தேன். சரக்கு வாகனத்தை மாரிமுத்து என்பவர் ஓட்டிவந்தார். அவரை நான் காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன். ஆஜர் எதிரி தான் மாரிமுத்து ஆவார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் முதல்விசாரணையில்சொல்லியுள்ள விவரங்களைத்தான் போலீசார் என்னை விசாரித்த போதும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மாரிமுத்து தான் விபத்து சம்பவத்தின் போது சரக்கு வாகனத்தை ஓட்டிவந்தார் என்ற விவரம் யார் எனக்கு சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது என்றால்அங்கிருந்தவர்கள் என்னிடம் சொன்னார்கள். மேலும் சாட்சி மணிகண்டன் தன்னிடம் சொன்னதாக சாட்சியம் அளிக்கிறார்.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.09.12 17:22:37 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/09/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 93/2020

List of Witness : Lw7

Prosecution Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாலகிருஷ்ணன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனிச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/09/2024

(எதிரி ஆஜர்)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் விருப்பாட்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 02.12.2019 ம்தேதி இரவு நான் வேலை முடித்துவிட்டு லேட்டாக வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். அப்போது சமத்துவபுரம் முன்பு விருப்பாட்சி மேட்டில் கௌதம் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நானும், தாமரைக்கண்ணனும் சம்பவ இடத்தை பார்க்க சென்ற போது சத்திரப்பட்டி போலீசார் வந்து படம் வரைந்து எழுதிக்கொண்டிருந்தார்கள். எங்களிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நானும், தாமரக்கண்ணனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **பார்வைமகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.09.12 17:22:43 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/09/2024